456 '' எந்தக் கட்சியையும் சாராத உறுப்பினர்கள் '' என அறிவிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் பேரவையில் தனிக் குழுவாக இயங்க அங்கீகாரம் கோரி எழுதியுள்ள கடிதம் குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

அந்த அளவுக்கு தனித் தனிக் குழுக்களாக இருக்கிறவர்களை ஒரே குழுவாகப் பேரவைத் தலைவா ஏற்றுக் கொள்ளலாம் என்றுதான் இருக்கிறது. 'ஏற்றுக்கொள்ளலாம்' என்று விதி 120 இருக்கிறதே தவிர, எந்த அடிப்படையிலே ஏற்றுக்கொள்ளலாம் என்பதற்கு 121-வது விதியும் இருக்கிறது. 120-ஐ மட்டும் எனக்குக் கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள்.

"121—In recognising a Parliamentary Party or group, the Speaker shall take into consideration the following principles :—guidelines கூட அல்ல, principles—

"(1) An association of Members who propose to form a Parliamentary Party or group

(a) shall have announced at the time of the General Elections a distinct ideology and programme of Parliamentary work on which they have been returned to the House." . . .

முற்பகல் 11-35

அவர்கள் தேர்தலுக்கு நிற்கிற காலத்திலேயே ஒரு குறிப்பிட்ட தத்துவத்தை ஏற்றுக்கொண்டு ஒரு குறிப்பிட்ட குறிக்கோளுக்காக நின்று இந்த அவைக்கு வந்தவர்களாக இருக்க வேண்டும் என்று இருக்கிறது. அவர்களைப் பொறுத்தமட்டில் இன்றைக்கு 'அன் அட்டாச்டு' என்று அறிவித்திருந்தாலும், அன்றைக்குத் தேர்தல் நேரத்தில் மக்கள் மத்தியிலே சொல்லி வாக்குக் கேட்டு எந்த அனுமதியின் பேரில் இங்கே வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சராக வீற்றிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களை முதலமைச்சராக ஆக்குவதற்கு எங்களுக்கு வாக்களியுங்கள் என்பதுதான் மக்களுடைய மத்தியிலே சொன்ன ஐடியாலஜி என்று நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதை இன்றைக்கு ஏற்றுக்கொண்டு இருக்கிறார்களா இல்லையா என்ற விவாதத்திற்குள்ளே நான் போகவில்லை.

அடுத்து, (b). அதுதான் ரொம்ப முக்கியமானது.

"(b) shall have an organisation both inside and outside the House;" என்கிற பிரிவு, இங்கே, உள்ளே அவர்கள் அமைத்திருக்கிற இதே அமைப்பு போல, வெளியிலேயும் ஒரு அமைப்பை அவர்கள் வைத்திருக்க வேண்டும்.

". . . . and (c) shall have at least a strength equal to the quorum fixed to constitute a sitting of the House, that is, one-tenth of the total number of Members of the House."

அதுதான் முக்கியம். அது இருந்தால்தான் பேரவைத் தலைவரிடத்திலே இத்தகைய அங்கீகாரத்திற்கே வரலாம். ஒரு அவை கூடுவதற்குரிய கோரம், அதாவது பத்தில் ஒரு பங்கு கோரமாவது, அந்த கோரத்தின் எண்ணிக்கை அளவுக்காவது உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், அந்தக் கோரிக்கையோடு வரலாம், பேரவைத் தலைவர் அங்கீகரிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியென்றால், இந்தப் பேரவையின் கோரத்திற்கு உரிய எண்ணிக்கையான 24 உறுப்பினர்கள் இருந்திருப்பார்களேயானால், இந்த '120'-ஐச் சொல்லி என்னிடத்தில் அங்கீகாரம் கேட்டிருக்கலாம். எண்ணிக்கையோ 3, தேவையோ 24. எனவே அவர்களுடைய கோரிக்கையை இந்த அளவில் என்னாலே பரிசீலிக்க இயலவில்லை. அவர்கள் இப்படி ஒரு லெஜிஸ்லேச்சர் குரூப்பை ஆரம்பித்திருக்கிறோம் என்றும், அதற்கு இன்னின்னார் தலைவர், துணைத் தலைவர், விப் என்று சொல்லி, அங்கீகரிக்க வேண்டுமென்று எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தின் அடிப்படையில் அங்கீகாரம் அளிப்பது என்பது, அந்த 120, 121-ன்படி என்னாலே இயலாமல் இருக்கிறது. இருந்தாலும் அவர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள் சட்டமன்றத்திற்குள்ளே என்பதைப் பேரவையின் கவனத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

''எக்கட்சியையும் சாராத உறுப்பினர்கள்'' என அறிவிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்கட்கு இருக்கைகள் ஒதுக்கீடு—தொடர்ச்சி.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதற்கு முன்னால் பேசியபோது, நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபொழுது யாருக்காகவோ இடத்தை மாற்றச் சொல்லி பேரவைத் தலைவருக்கு கடிதம் எழுதினேன். அதன்படி மாற்றித் தரப்பட்டது என்றார்கள். அது எனக்குச் சரியாகப் புரியவில்லை. யாருக்காக அந்த இட மாற்றத்தைக் கேட்டேன் என்று சொல்கிறார்கள் என்று எதிர்கட்சித் தலைவர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர்

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஸ். ஆர். இராதா அவர்களுக்கு, பின்னாலே இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. பிறகு எதிர்க்கட்சித் தலைராக இருந்த இன்றைய முதலமைச்சர் அவர்கள் எழுதிக் கேட்டதற்குப் பின்னாலே, அவருக்கு இருக்கை எனக்குப் பக்கத்திலே ஒதுக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் பதவியை நான் விட்டுக் கொடுத்து, எஸ். ஆர். இராதா அவர்களை எதிர்க்கட்சித் தலைவராக்கினேன். அதன் பிறகு தான் அவருக்கு முன் வரிசையில் இடம் அளிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: எதிர்கட்சித் தலைவராக வந்ததற்குப் பிறகு முன் வரிசைக்கு, இந்த இடத்திற்கு வந்தார். எதிர்க்கட்சித் தலைவராக வருவதற்கு முன்பாகவே உறுப்பினராக இருக்கும்போதே அவருக்கு இடம் மாற்றி ஒதுக்கப்பட்டது இரண்டாவது வரிசையில்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைய பேரவைத் தலைவர், இந்தப் பேரவையிலே அறிவித்திருக்கிற ஒரு அறிவிப்பையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர், இதுபற்றி பேரவைத் தலைவர் வகுக்கும் வரிசைப்படி இருக்கையில் அமர வேண்டும் என்பதுதான் பேரவை விதி 6. எல்லோரும் ஒப்புக் கொண்ட உண்மை என்னவென்றால், விதி 6-ன்படி பேரவைத் தலைவர் ஒதுக்கும் வரிசைப்படி, உறுப்பினர்கள் இருக்கையில் அமர வேண்டும். அதற்கு எந்த வகையிலான கூடுதல் குறைச்சலான உள் விதிகளோ உட்பிரிவுகளோ கண்டிப்பாக இல்லை. அதற்கு விளக்கத்திற்கு, இடமே இல்லை என்பதுதான் இப்போதைய நிலை என்றாலும் நம்முடைய உறுப்பினர்களும் மற்றவர்களும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இதிலே மேல் கேள்விகளுக்கு இடம் இல்லை என்ற நிபந்தனையோடு அதைச் சொல்வது என்னுடைய கடமை என்று கூட நான் கருதவில்லை. பேரவை, முதல் முறையாக அமைக்கப்பட்டிருந்து, பொதுவாக உறுப்பினர்கள் பெயர் தமிழ் அகர வரிசைப்படி இருக்கைகள் ஒதுக்குவது வழக்கமாக இருக்கிறது. முன்னாள் அமைச்சர்களாகவும்,